மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 234/2025 |
| பெயர் | : | கணேசன் (PW–4) |
| த/பெ. | : | சோடலைமுத்து |
| வயது | : | 42 |
| கிராமம் | : | கீழக்கோட்டை |
| தாலுகா | : | ஓட்டப்பிடாரம் |
| Calling | : | தலைமைக்காவலர் |

(Accused Pothinarayanan produced from judicial custody. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18 th day of March 2026

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது புதியம்புத்தூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.08.2025 ம் தேதி காலை 09.00 மணிக்கு புதியம்புத்தூர் காவல் நிலையத்தில் நான் நிலைய பொறுப்பில் இருந்த போது திருமதி. சக்தி வயது 54, க/பெ கருப்பசாமி, தெற்கு காலணி, புதியம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 246/2025 சட்டப்பிரிவுகள் 296(b), 351(3) of BNS and 4 of TNPHW Act ஆக வழக்குப் பதிவு செய்து வாதியின் புகார் மனு மற்றும் அசல் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை இணைத்து கணம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் ஓட்டப்பிடாரம் அவர்களுக்கு அனுப்பி வைத்து இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை உதவி ஆய்வாளர் திரு.ஜெஸ்லின் அவர்களுக்கு தகவல் சொல்லி நிலையத்தில் பார்வைக்கு வைத்தேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தது தான். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.**) இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வழக்கின் புகார்தாரரின் முகவரி புதியம்புத்தூர் என்றால் சரிதான். புதியம்புத்தூரில் காவல் நிலையம் உண்டு என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளானது 21.08.2025 ம் தேதி காலை 08.00

மணி என்றால் சரிதான். ஆனால் புகார் அளிக்கப்பட்டது 1 மணி நேரம் கழித்து காலை 09.00 மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கான காரணம் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் காலம் எண் 08 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் அ.சா. 1 இடமிருந்து புகார் மனு பெறவில்லை என்றும் சொன்ன விதத்தில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் அ.சா.1 ஆல் கொடுக்கப்பட்ட அசல் புகார் மனு மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி புகார் மனுவில் குற்ற சம்பவம் துலங்காது என்பதால் அது மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– திரு.S.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.